# இஸ்லாத்தைப் பற்றி பத்து கட்டுக் கதைகள்

عشر شبهات محرفة حول الإسلام و الرد عليها

< தமிழ் >

تاميلية

## அயிஷா ஸ்டேசி

(© 2014 IslamReligion.com)Aisha Stacey

اسم المؤلف: عائشة ستاسي

ஜாசிம் பின் தஇயான்

முஹம்மத் அமீன்

ترجمة: جاسم بن دعيان

مراجعة: محمد أمين

# இஸ்லாத்தைப் பற்றி பத்து கட்டுக் கதைகள்

## இஸ்லாத்தைப் பற்றி பத்து பெரும் கட்டுக் கதைகள்

தகவல் பெற எத்தனையோ வசதிகள் இருப்பினும்

இஸ்லாத்தைப் பற்றிய அறிவீனத்தை தடுக்க முடியாது

(© 2014 IslamReligion.com)Aisha Stacey

2014 டிசெம்பர் 28 ம் திகதி அரப் நிவூஸ்

பத்திரிகையில் பிரசுரமாகிய கட்டுரை

தமிழாக்கம் ஜாசிம் பின் தஇயான்

அரேபிய தீபகற்பத்தை விட்டு புறப்பட்ட முஸ்லிம்கள் சுற்றிலும் உள்ள தேசங்களில் இஸ்லாமிய சாம்ராஜ்யங்கள் அமைக்கத் துவங்கிய நாள் முதல், இஸ்லாமிய வாழ்க்கை முறையை பற்றி சந்தேகங்களும், கட்டுக் கதைகளும் வளரத் துவங்கின. சுமார் 1,500 வருடங்களுக்கு முன் ஆரம்பித்த ஏக இறை வணக்கம், எத்தனையோ தேசங்களை மாற்றி அமைத்தது. எனினும் இஸ்லாத்தைப் பற்றிய விபரங்களும், விளக்கங் களும் உலக மக்களுக்கு நிறையவே இருப்பினும், இஸ்லாத்தை பற்றிய புதிர்கள் இன்னும்

எஞ்சியிருப்பதை காண்கிறோம். இன்னும் மக்கள் உள்ளத்தில் பிழையான கருத்துக்களையும், வேற்றுமையையும் உண்டு பண்ணும் பத்து புதிர்களையும், கட்டுக் கதைகளையும் சற்று பரீட்சித்துப் பார்ப்போம்.

## 1. இஸ்லாம் தீவிரவாதத்தை ஆதரிக்கிறது.

இதுதான் 21ம் நூற்றாண்டின் ஆரம்ப யுகத்தில், இஸ்லாத்துக்கு எதிராக இயற்றப் பட்ட மிகப் பெரிய கட்டுக் கதையாகும். நிரபராதியான மக்களை உலக வல்லரசுகள் ரத்த வெறியில் கொன்று குவித்த வேளையில், விலை கூற முடியாத மனித உயிரை காப்பதற்கு யுத்த காலத்தில் கடை பிடிக்க வேண்டிய சட்டங்களை உலகத்தில் முன் வைத்தது இஸ்லாமிய மதமே.

مِنْ أَجْلِ ذَٰلِكَ كَتَبْنَا عَلَىٰ بَنِي إِسْرَائِيلَ أَنَّهُ مَن قَتَلَ نَفْسًا بِغَيْرِ نَفْسٍ أَوْ فَسَادٍ فِي الْأَرْضِ فَكَأَنَّمَا قَتَلَ النَّاسَ جَمِيعًا وَمَنْ أَحْيَاهَا فَكَأَنَّمَا أَحْيَا النَّاسَ جَمِيعًا ۚ وَلَقَدْ جَاءَتْهُمْ رُسُلُنَا بِالْبَيِّنَاتِ ثُمَّ إِنَّ كَثِيرًا مِّنْهُم بَعْدَ ذَٰلِكَ فِي الْأَرْضِ لَمُسْرِفُونَ ﴿٣٢﴾

*“இதன் காரணமாகவே, ‘எவரொருவர் மற்றோர் ஆத்மவின் கொலைக்குப் பிரதியாகவோ, அல்லது பூமியில் (உண்டாகும்) குழப்பத்தி (னை தடைசெய்வத) ற்காகவோ தவிர, (அநியாயமாக மற்றொருவரை) கொலை செய்கின்றாரோ அவர், மனிதர்கள் யாவரையுமே கொலை செய்தவர் போலாவார் என்றும் எவர் அதனை (ஒரு ஆத்மாவை) வாழ வைக்கின்றாரோ அவர் மனிதர்கள் யாவரையுமே வாழ வைத்தவர் போலாவார்.’* அல் குர்ஆன் 5;32

நிரபராதிகளை கொல்வது இஸ்லாத்தில் சம்பூர்ணமாக தடுக்கப் பட்டுள்ளது. முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தனது சஹாப்பாக்களை போருக்கு அனுப்பும் போது, “அல்லாஹ்வின் பெயரால் செல்லுங்கள். ஆனால் வயது முதிர்ந்தவர்களை, குழந்தைகளை, சிறு பிள்ளைகளை, அல்லது பெண்களை கொல்லாதீர்கள். நன்மையையே பரப்புங்கள், நன்மையே செய்யுங்கள். நன்மை செய்பவர்களை அல்லாஹ் நேசிக்கிறான். ஆதாரம் அபூ தாவூத். கோவில்களில் வாழும் துறவிகளை கொல்லாதீர்கள், அல்லது வணக்க ஸ்தலங்களில் அமர்ந்திருக்கும் மனிதர்களை கொல்லாதீர்கள்.(இமாம் அஹ்மத்) ஒரு போர்களத்தில் பெண்ணொருவரின் சடலத்தைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், ”இந்த பெண் யுத்தம் புரிய வில்லை. அப்படியானால் இவள் எவ்வாறு கொல்லப்பட்டாள்?” எனறு வினவினார்கள்.

இந்த யுத்த சட்டங்கள் இஸ்லாமிய ராஜ்யத்தின் முதலாவது காலிபாவான இபூ பக்கர் (ரழி) அவர்களால் இன்னும் முக்கியத்துவம் பெற்றது. "நான் உங்களுக்கு பத்து விஷயங்கள் பற்றி கட்டளையிடுகிறேன். பெண்களை, பிள்ளைகளை, முதியோர்களை, பலஹீன மானவர்களை கொல்லாதீர்கள். பழம் தரும் மரங்களை வெட்டாதீர்கள். மக்கள் வாழும் இடங்களை அழிக்காதீர்கள். உணவுக்காகவன்றி, கால்நடைகளை, ஒட்டகங்களை கொல்லாதீர்கள். தேனீக்களை எரிக்காதீர்கள், அவற்றின் கூட்டை உடைக்காதீர்கள். யுத்தத்தில் கிடைத்த பொருட்களிலிருந்து திருடாதீர்கள். கோழையாக இருக்காதீர்கள் (தப்பாரி). அத்துடன் தகுந்த காரணமின்றி தாக்குதல் துவங்குவது முஸ்லிம்களுக்கு தடைசெய்யப்பட்டுள்ளது. எதிர்ப்பு காட்டாத மக்களை கொல்வதற்கு முஸ்லிம்களுக்கு அனுமதி இல்லை."

وَقَاتِلُوا فِي سَبِيلِ اللَّهِ الَّذِينَ يُقَاتِلُونَكُمْ وَلَا تَعْتَدُوا ۚ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْمُعْتَدِينَ (١٩٠)

*"உங்களுடன் போர் புரிபவர்களோடு அல்லாஹ்வுடைய பாதையில் நீங்களும் போரிடுங்கள். நீங்களும் வரம்பு மீறாதீர்கள். நிச்சயமாக உல்லாஹ வரம்பு மீறுபவர்களை நேசிக்க மாட்டான்."* அல் குர்ஆன் 2;190

## 2. இஸ்லாம் பெண்களை கொடுமை படுத்துகிறது.

வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் இஸ்லாம் பெண்களை மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் வைத்திருப்பதை காணலாம். மகள் என்ற நிலையில் தன் தந்தைக்கு சுவர்க்கத்தின் வாசலை திறந்து கொடுக்கிறாள். (ஸஹீஹ் முஸ்லிம்) தாய் என்ற ஸ்தானத்தில் சுவர்க்கம் அவளது காலடியில் இருக்கிறது. (அஹ்மத், நஸாயி) மனைவி என்ற ஸ்தானத்தில் தன் கணவனின் மார்க்கத்தில் பாதியை பூர்த்தி செய்கிறாள். (பய்ஹகி) பெண்களை மரியாதையுடனும், பண்புடனும் நடத்தும் படி இஸ்லாம் கட்டளை யிடுவதால், பெண்களை எல்லா சந்தர்ப்பத்திலும் முஸ்லிம் ஆண்கள் கௌரவத்துடன் நடத்த கடமை பட்டுள்ளனர்.

இஸ்லாத்தில் ஆண்களை போல் அல்லாஹ்வை விசுவாசம் கொள்ளவும் அவனை வணங்கவும் பெண்களும் ஏவப்பட்டுள்ளனர். மறுமையில் வெகுமதி பெறுவதற்கு பெண்களும் சம உரிமை உண்டு.

وَمَن يَعْمَلْ مِنَ الصَّالِحَاتِ مِن ذَكَرٍ أَوْ أُنثَىٰ وَهُوَ مُؤْمِنٌ فَأُولَٰئِكَ يَدْخُلُونَ الْجَنَّةَ وَلَا يُظْلَمُونَ نَقِيرًا (١٢٤)

*"இன்னும் ஆணாயினும் அல்லது பெண்ணாயினும், எவர் உண்மையாகவே விசுவாசங் கொண்டவராக இருக்க, நற்கருமங்களை செய்வாராயின் - அத்தகையோர் சுவனத்தில் பிரவேசிப்பார்கள். அவர்கள் அற்ப அளவும் அநீதம் செய்யப்பட மாட்டார்கள்."* அல் குர்ஆன் 4;124

எந்த வித உரிமையுமற்ற கால்நடைகளாக எல்லா மதங்களும் பெண்களை கருதிய யுகத்தில், இஸ்லாம் சொத்துக்களை மாத்திரமன்றி, தமது செல்வங்களை நிர்வகிக்கும் உரிமையையும் பெண்களுக்கு வழங்கியது. சொத்துக்களுக்கு வாரிசுரிமையும், கல்வி பயிலும் உரிமையும் பெண்களுக்கு இஸ்லாம் சட்டப்படி கொடுத்தது. திருமணம் பேசி வரும் மணமகனை ஏற்கவும், நிராகரிக்கவும் உரிமை பெற்ற பெண்கள், தமது வருமானத்தை குடும்பச் செலவுக்கு உபயோகிப்பதா இல்லையா என்று தீர்மானிக்கும் உரிமையும் பெற்றனர். அத்துடன் தமக்கு தேவை ஏற்பட்டால் விவாக ரத்து கேட்கவும் இஸ்லாம் அவர்களுக்கு உரிமை வழங்கியது.

இத்தனைக்கும் மத்தியில் இன்றும் சில முஸ்லிம் பெண்கள் கொடுமைகளுக்கு ஆளாகும் அவல நிலை உள்ளதை மறுக்க முடியாது. இன்றும் அனேக பெண்கள் தமது உரிமைகள் என்ன என்பதைப் பற்றிய அறியாமையும், இஸ்லாத்தில் இல்லாத சமூக கலாச்சாரங்களும் இவற்றுக்கு காரணங்களாக உள்ளமை துரதிர்ஷ்டமே. தம்மை முஸ்லிம்கள் என பெருமையடிக்கும் சக்தி வாய்ந்த மனிதர்கள், இயக்கங்கள், அரசுகள் இருப்பினும் அவர்களும் இஸ்லாத்தின் கொள்கைகளை சரிவர பின்பற்றுவதில் பெரும் தவறுகள் செய்கின்றனர். அல்லாஹ்வால் பெண்களுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகளை இஸ்லாம் காட்டிய முறையில் செயல் படுத்தியிருந்தால், பெண்களுக்கு உலகெங்கும் நடை பெறும் கொடுமைகளை எப்போதோ நீக்கியிருக்கலாம். "உயர் குணமுள்ள ஒரு ஆணை தவிர வேறு எவரும் பெண்களை கௌரவத்துடன் நடத்த மாட்டார். அது போல் இழிகுணம் கொண்ட ஒரு ஆணை தவிர வேறு எவரும் பெண்களை கேவலமாக நடத்த மாட்டார்." என்று முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அத் திர்மிதி)

3. முஸ்லிம் மக்கள் அனைவரும் அரபிகள்.

இஸ்லாம் எல்லா மக்களுக்கும், எல்லா காலத்துக்கும், எல்லா இடங்களுக்கும் இறக்கப் பட்ட மதம். முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அரபு இனத்தை சேர்ந்தவர் என்பதால் அல் குர்ஆன் அரபு மொழியில் இறக்கப்பட்டது. ஆனால் முஸ்லிம்கள் அனைவரும் அரபிகள் என்றோ அரபிகள் அனைவரும் முஸ்லிம்கள் என்றோ கூறுவது தவறு. உலகில் வாழும் 1.57 பிலியன் முஸ்லிம்களில் பெரும் பான்மையோர் அரபு இனத்தவர்கள் அல்லர்.

உலக மக்கள், விஷேடமாக மேற்கு நாடுகளில் வாழும் மக்கள் இஸ்லாத்தை மத்திய கிழக்கு நாடுகளுடன் சம்பந்தப் படுத்தினாலும், உலக முஸ்லிம்களில் 62% மக்கள் ஆசியா பசிபிக் நாடுகளில் வாழ்வதாகவும், மத்திய கிழக்கிலும், வட ஆபிரிக்கா நாடுகளிலும் வாழும் மொத்த முஸ்லிம்களின் ஜனத்தொகையை (317 மில்லியன்) விட இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் 344 மிலியன் முஸ்லிம் மக்கள் வாழ்வதாக Pew Research Centre ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கிறது. "Mapping the Global Muslim Population," by the Pew Forum on Religion & Public Life.

இஸ்லாம் என்பது ஒரு இனமோ அல்லது ஒரு ஜாதியோ அல்ல. அது ஒரு மதம். அதனால் வட துருவத்திலிருந்து தென் துருவத்துக்கருகில் உள்ள பிஜி தீவு வரை உலகில் எல்லா நாடுகளிலும் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள்.

يَا أَيُّهَا النَّاسُ إِنَّا خَلَقْنَاكُم مِّن ذَكَرٍ وَأُنثَىٰ وَجَعَلْنَاكُمْ شُعُوبًا وَقَبَائِلَ لِتَعَارَفُوا ۚ إِنَّ أَكْرَمَكُمْ عِندَ اللَّهِ أَتْقَاكُمْ ۚ إِنَّ اللَّهَ عَلِيمٌ خَبِيرٌ ﴿١٣﴾

*“மனிதர்ளே! நிச்சயமாக நாம் உங்களை ஓர் ஆண் ஓர் பெண்ணிலிருந்து படைத்தோம். இன்னும், நீங்கள் ஒருவருக் கொருவர் அறிமுகமாகிக் கொள்வதற்காக உங்களை கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம்.”* கூர்ஆன் 49;13

### 4. இஸ்லாம் மற்ற மதங்களை அங்கீகரிப்பதில்லை

மத சுதந்திரத்தை இஸ்லாம் எப்போதும் அனுமதித்த்து என்பதை சரித்திரம் சான்று பகர்கிறது. மாற்று மதத்தவர்கள், மத நம்பிக்கையற்ற வர்கள் ஆகியோருடன் பொறுமையுடன் நடந்துக் கொள்ளுமாறு குர்ஆன் வசனங்களும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வழி காட்டலும் போதிக்கின்றன. இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வாழும் அந்நிய மதத்தவர்கள்

தமது மதத்தை பின்பற்றவும், தமது வழக்கு மன்றங்களை நடாத்தவும் அனுமதிக்கப் பட்டனர்.

## 5. இஸ்லாம் ஆரம்பித்து 1,400 வருடங்கள் மாத்திரமே ஆகின்றன.

இஸ்லாம் என்ற வார்த்தையின் ஸ-ல-ம எனும் மூலக் கருத்து அரபு மொழியில் அமைதி, பாதுகாப்பு எனும் பொருளை குறிக்கும் ஸலாம் என்ற வாரத்தையாகும். அதாவது இஸ்லாம் என்பது, அல்லாஹ்வுக்கு அடி பணிவதும், அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப வாழும் போது ஏற்படும் நிம்மதியையும், பாதுகாப்பையும் குறிக்கும். இதன் அடிப்படையில், எந்த கால கட்டத்திலும் ஏக இறை நம்பிக்கையுடன் இறைவனின் கட்டளைக்கு அடிபணிந்து வாழ்ந்த எந்த மனிதனும் முஸ்லிம் என்றே கருதப்படுவான். ஆதம் (அலை) அவர்கள் படைக்கபட்ட நாள் முதல் மனித இனம் இஸ்லாத்தையே பின்பற்றி வந்துள்ளது. தமது மக்களுக்கு நேர் வழியை கற்றுக் கொடுப்பதற்காக நபிமார்களையும், ரசூல்மார்களையும் இறைவன் காலம் காலமாக அனுப்பிக் கொண்டே இருந்தான். வணங்குவதற்கு உரிய இறைவன் ஒருவன் மாத்திரமே, அவனை மாத்திரமே வணங்க வேண்டும் எனும் பிரதான செய்தியையே இந்த நபிமார்கள் அனைவரும் கொண்டு வந்தனர். ஆதம் (அலை) முதல் ஆரம்பித்த இந்த நபிமார்கள் வரிசையில் நூஹு, இப்ராஹீம், மூஸா, தாவூத், சுலைமான், யாஹ்யா, ஈசா ஆகிய நபிமார்கள் (அலை) அனைவரும் அடங்குவார்கள். அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

وَمَا أَرْسَلْنَا مِن قَبْلِكَ مِن رَّسُولٍ إِلَّا نُوحِي إِلَيْهِ أَنَّهُ لَا إِلَـٰهَ إِلَّا أَنَا فَاعْبُدُونِ ﴿٢٥﴾

*“மேலும், (நபியே!) உமக்கு முன்னர் எந்தத் தூதரையும் ‘நிச்சயமாக என்னைத் தவிர (வணக்கத்துக்குரிய) வேறு நாயனில்லை. எனவே, என்னையே நீங்கள் வணங்குங்கள்‘ என்று அவர் பால் நாம் வஹீ அறிவித்தே தவிர நாம் அனுப்பவில்லை.”* 21;25

எனினும் இந்த நபிமார்கள் கொண்டு வந்த உண்மையான செய்திகள் காலம் கடந்த பின் மக்கள் மனதிலிருந்து மறைந்தன, அல்லது நேர்மையற்ற மனிதர்களால் பொய்யுடன் கலப்படம் செய்யப்பட்டன. மிகவும் சமீப காலத்தில் அனுப்பப் பட்ட தவ்ராத், இஞ்சீல் போன்ற வேதப் புத்தகங்கள் கூட இவ்வாறு கலப்படத்துக்கு ஆளாகிய காரணத்தால், மக்களை நேர்

வழிக்கு அழைத்தும் செல்லும் தகுதியை இழந்தன. அதனால், ஈசா (அலை) அவர்களுக்கு சுமார் 600 வருடங்களுக்கு பிறகு, இதற்கு முன்னர் நபிமார்கள் மூலம் அனுப்பிய அதே செய்தியை மீண்டும் உயிர்ப்பித்து முஹம்மத் நபி (ஸல்) அவர்களை அல்லாஹ் தனது இறுதி நூலாகிய அல் குர்ஆனுடன், எல்லா மனித இனத்துக்கும் வழி காட்டியாக அனுப்பி வைத்தான். அல்லாஹ்விடமிருந்து இறுதியாக இறங்கிய நூலாகிய அல் குர்ஆனை விசுவாசம் கொண்டு அதனை பின்பற்றுவது மனிதர்கள் அனைவர் மீதும் விதியாக்கப் பட்டுள்ளது. இதனை பற்றி அல்லாஹ் குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்.

وَمَن يَبْتَغِ غَيْرَ الْإِسْلَامِ دِينًا فَلَن يُقْبَلَ مِنْهُ وَهُوَ فِي الْآخِرَةِ مِنَ الْخَاسِرِينَ (٨٥)

*“இன்னும், இஸ்லாம் அல்லாததை மார்க்கமாக எவராவது தேடினால், அப்பொழுது அவரிடமிருந்து (அது) அங்கீகரிக்கப் படவே மாட்டாது; மேலும் மறுமையில், அவர் நஷ்டமடைந்தோரில் இருப்பார்.”*3;85

وَمَا أَرْسَلْنَاكَ إِلَّا كَافَّةً لِّلنَّاسِ بَشِيرًا وَنَذِيرًا وَلَٰكِنَّ أَكْثَرَ النَّاسِ لَا يَعْلَمُونَ (٢٨)

*“மேலும், (நபியே!) உம்மை மனிதர்கள் அனைவருக்கும் நன்மாராயங் கூறுபவராவும், அச்சமூட்டி எச்சரிக்கை செய்ப வராகவுமேயன்றி நாம் அனுப்பவில்லை. எனினும், மனிதர்கள் பெரும்பாலோர் (இதனை) அறிந்துக்கொள்ள மாட்டார்கள்.”* 34;28

## 6. முஸ்லிம்கள் ஈசா (அலை) அவர்களை விசுவாசம் கொள்வதில்லை.

முஸ்லிம்கள் நபிமார்கள் அனைவர் மீதும் அன்பு கொண்டுள்ளார் கள். அதாவது முஸ்லிம்கள் ஈசா (அலை) என அரபு மொழியில் அழைக்கப்படும் ஜேசு நாதர் மீது நம்பிக்கை, பாசம், மரியாதை வைத்துள்ளார்கள். ஆனால் அன்னாருடைய ஸ்தானத்தை பற்றி அல் கூர்ஆனும், நபிமொழிகள் கூறும் உண்மையை முஸ்லிம்கள் விளங்கி வைத்துள்ளார்கள் என்ற வித்தியாசத்தை காண்கிறோம். இந்த காரணத்தால் ஈசா (அலை) அவர்களை கடவுள் என்றோ, கடவுளின் மைந்தன் என்றோ அல்லது மூவரில் ஒருவர் என்றோ முஸ்லிம்கள் விசுவாசம் கொள்வதில்லை.

அல் குர்ஆனில் மூன்று சூராக்கள் - அத்தியாயங்கள் ஈசா (அலை), அவரது தாயார் மர்யம் (அலை), அவர்களது குடும்பம் பற்றி விளக்கம் கூறுகின்றன. ஈசா (அலை) அவர்களின் வாழ்க்கையை பற்றி இவற்றில் கூறப்படும் தகவல்கள் பைபிளில் காணக் கிடையாது. கன்னிப்பெண் மரியம் (அலை) அவர்கள் வயிற்றில் ஒரு தந்தை இல்லாது ஏற்பட்ட ஈசா (அலை) அவர்களின் அற்புதப் பிறப்பையும், ஈசா (அலை), தான் கடவுளுக்கு பிறந்த மகன் என்றோ, தன்னை மக்கள் வணங்க வேண்டும் என்றோ ஒரு போதும் கூறவில்லை என்பதையும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள். அத்துடன் ஈசா (அலை) அவர்கள் கடைசி காலகட்டத்தில் மீண்டும் உலகத்துக்கு மீண்டும் திரும்பி வருவார்கள் என்பதையும் முஸ்லிம்கள் நம்புகிறார்கள்.

## 7. முஹம்மது நபி (ஸல்) குர்ஆனை எழுதினார்கள்.

முஹம்மது நபி (ஹல்) அவர்களின் விரோதிகள் முதன் முதலாக இந்த குற்றச்சாட்டை எழுப்பினார்கள். இஸ்லாம் மதத்தின் எழுச்சியினால், அக்காலத்தில் அரேபிய சமூகத்தில் வாழ்ந்த பிரபல தனவந்தர்களின் செல்வாக்கு குறைய ஆரம்பித்தது. சமூகத்தில் தமது செல்வாக்கை காப்பாற்றிக் கொள்ளும் நோக்கத்தில், அல்லாஹ்வினால் இறக்கப் பட்ட குர்ஆன் மீது இவர்கள் சந்தேகங்களை பரப்ப ஆரம்பித்தார்கள்.

ஜிப்ரீல் (அலை) எனும் மலக்கு 23 வருடங்களாக முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்கு அல் குர்ஆனை அல்லாஹ்விடமிருந்து கொண்டு வந்து அறிவித்தார். இதனை பற்றி அல்லாஹ் குர்ஆனில் மிகத் தெளிவாக இவ்வாறு அறிவிக்கிறான்.

وَإِذَا تُتْلَىٰ عَلَيْهِمْ آيَاتُنَا بَيِّنَاتٍ قَالَ الَّذِينَ كَفَرُوا لِلْحَقِّ لَمَّا جَاءَهُمْ هَـٰذَا سِحْرٌ مُّبِينٌ (٧) أَمْ يَقُولُونَ افْتَرَاهُ ۖ قُلْ إِنِ افْتَرَيْتُهُ فَلَا تَمْلِكُونَ لِي مِنَ اللَّـهِ شَيْئًا ۖ هُوَ أَعْلَمُ بِمَا تُفِيضُونَ فِيهِ ۖ كَفَىٰ بِهِ شَهِيدًا بَيْنِي وَبَيْنَكُمْ ۖ وَهُوَ الْغَفُورُ الرَّحِيمُ (٨)

*“இன்னும் நம்முடைய வசனங்கள் தெளிவானவையாக அவர்களிக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் சத்திய (வேத)த்தை நிராகரித்து விட்டார்களே அத்தகையோர்- அது (உண்மையானது) வந்தபோது இது தெளிவான சூனியமாகும் என்று கூறினார்கள். அல்லது இதனை அவர் இட்டுக் கட்டிக்கொண்டார் என்று அவர்கள் கூறுகின்றனரா? (அவர்களுக்கு) நீர் கூறுவீராக, இதனை நான் இட்டுக் கட்டி யிருந்தால் (அதற்காக)*

*அல்லாஹ்விடமிருந்து (உள்ள தண்டனையில்) எதையும் (தடுத்து என்னை காப்பாற்ற) நீங்கள் சக்தி பெறமாட்டீர்கள்....”* சூரா 46; 7,9

அத்துடன் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் எழுத, வாசிக்கத் தெரியாத ஒரு மனிதர். ஏனெனில் அன்னார் கல்வி பயிலவில்லை. இதனையும் அல்லாஹ் அல் குர்ஆனில் குறிப்பிட்டுள்ளான்.

وَمَا كُنتَ تَتْلُو مِن قَبْلِهِ مِن كِتَابٍ وَلَا تَخُطُّهُ بِيَمِينِكَ ۖ إِذًا لَّارْتَابَ الْمُبْطِلُونَ ﴿٤٨﴾

*“மேலும், (நபியே!) இதற்கு முன்னர் எந்த வேதத்தையும் நீர் ஓதுபவராக இருக்கவில்லை. உமது வலக்கையால் நீர் அதனை எழுதுபவராக (இருக்க) வுமில்லை.”* 29;48.

அல்குர்ஆனில் அற்புதமான வசனங்கள் நிறைய உள்ளன. இன்றைய விஞ்ஞானம் ஏற்றுக் கொண்ட உண்மைகளை 7வது நூற்றாண்டில் வாழ்ந்த கல்வி பயிலாத ஒரு மனிதர் எவ்வாறு அறிந்து எழுதினார் என்ற கேள்வி அன்னார் குர்ஆனை எழுதவில்லை என்று சான்று கூறுகிறது. மழை மேகங்களும், பனிக்காற்றும் எவ்வாறு ஏற்படுகின்றன அல்லது அகிலங்கள் விஸ்தார மடைவது போன்ற நவீன விஞ்ஞானம் இன்று கூறும் உண்மைகளை அன்னார் எவ்வாறு தெரிந்து வைத்திருந்தார்? ultrasound machine போன்ற நவீன கருவிகள் எதுவுமின்று தாயின் கர்ப்பத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் நிகழும் கருவின் வளர்ச்சியை பற்றி விபரமாக கூற நபி (ஸல்) அவர்களால் எவ்வாறு சாத்தியமானது?

## 8. பிறை முஸ்லிம்களின் சின்னமா?

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் தலைமை வகித்த முஸ்லிம் சமுதாயத்துக்கு எந்த ஒரு சின்னமும் இருக்கவில்லை. ஒட்டகத்தின் மீது பயணம் செய்யும் வர்த்தகக் கூட்டம் அல்லது ஒரு படை, தம்மை அடையாளம் காட்டுவதற்காக கறுப்பு அல்லது பச்சை போன்ற தனி நிறத்தில் கொடியை உபயோகித்தார்கள். கிறிஸ்தவர்களுக்கு சிலுவையை போன்று, யூதர்களுக்கு டேவிட்டின் நடசத்திரம் போன்று தம் இனத்தை அடையாளம் காட்டுவதற்காக இஸ்லாத்தில் எந்த சின்னமும் இருக்கவில்லை.

இஸ்லாத்துக்கு நீண்ட காலத்துக்கு முன்பிருந்தே துருக்கி தேசத்தின் நாணயத்தில் பிறைச் சின்னம் பொதிந்திருந்ததாக சரித்திரம் சான்று கூறுகிறது. 1453 கி.பி வருடத்தில் துருக்கி சேனை கொன்ஸ்தன்திநோபல் (நவீன இஸ்தான்புல்) நகரை கைப்பற்றிய போது அங்கு இருந்த கொடியின்

பிறையும் நட்சத்திரமும் துருக்கி படையின் சின்னமாக மாறியது. அந்த சின்னம் உள்ள கொடி உஸ்மான் சாம்ராஜ்யத்தின் கொடியாக ஏற்றுக்கொள்ளப் பட்டது. அதன் பின் அநேக முஸ்லிம் தேசங்கள் தமது தேசியக் கொடியில் பிறை சின்னத்தை அமைத்துக் கொண்டதால், பிறை சின்னம், இஸ்லாமிய மதத்தின் சின்னம் எனும் பிழையான கருத்தை ஏற்படுத்தியது.

## 9. முஸ்லிம்கள் சந்திரனை வணங்குகின்றனர்.

ஆதி காலத்தில் ஒரு சமூகம் சந்திரனை கடவுளாக வணங்கிய சம்பவத்துடன் இணைத்து, முஸ்லிம்கள் சந்திரனை வணங்குகிறார்கள் என வழி தவறிய சில மக்கள் குற்றம் சாற்றுகின்றனர். இது நிச்சயமாக பிழையான குற்றச்சாட்டாகும். அல்லாஹ் என்பது இறைவனின் ஒரு பெயர். முஸ்லிம்கள் மாத்திரமல்லாது, அரபு தாய்மொழியாக கொண்ட யூதர்களும் கிறீஸ்தவர்களும் கூட அல்லாஹ் என்ற அரபு வார்த்தையால் இறைவனை அழைக்கின்றனர்.

இப்ராஹிம் (அலை) அவர்களுக்கு முன்னால் வாழ்ந்த அரபி மக்களின் மதத்தைப் பற்றிய சரியான தகவல் ஏதும் இல்லை. ஆனால் அரபு மக்கள் சிலைகளையும், வானில் மின்னும் நட்சத்திரங்கள், கிரகங்கள், மரங்கள், கற்கள் ஆகியலற்றை வணங்கினார்கள் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அவர்களில் அனேகர் மனாத், லாத், உஸ்ஸா என்ற பெயரில் சிலைகளை வணங்கினார்கள். ஆனால் இந்த சிலைகள் சந்திரக் கடவுள் அல்லது சந்திரன் என்று கூறுவதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை.

## 10. ஜிஹாத் என்பது புனித யுத்தம்.

யுத்தம் என்ற சொல்லுக்கு அரபு வார்த்தை ஜிஹாத் என்பதல்ல. முஸ்லிம்களுக்கு எதிராக போர் புரிந்த ஐரோப்பிய கிறிஸ்தவர்கள், அப்போரை புனித சிலுவை யுத்தம் என்று அழைத்த அந்த வார்த்தை, அறிவில்லாத மக்களால் இஸ்லாத்தில் ஜிஹாத் என்று உபயோகிக்கப் பட்டது. ஜிஹாத் என்ற அரபு வார்த்தைக்கு கஷ்டப்பட்டு பாடுபடுதல், முயற்சி செய்தல் என்று பொருள் படும். இதில் பல்வேறு தரங்கள் உள்ளன.

- இதில் முதலாவது கட்டம் அல்லாஹ்வுக்கு சமீபமாக நெறுங்கும் முயற்சியில் ஒருவர் தனது ஆசாபாசங்களுக்கு எதிராக உள்ளத்தால் பாடுபடும் செயல்;

- இரண்டாவது கட்டம் நீதியும், மனித உரிமையும் அடிப்படையாகக் கொண்ட ஒரு முஸ்லிம் சமூகத்தை கட்டியெழுப்ப ஒருவர் செய்யும் கடும் முயற்சி;
- மூன்றாவது கட்டம் இஸ்லாமிய சமூகத்துக்கு எதிராக அட்டூலியம் புரியும் மக்களுக்கு எதிராக ஆயுதம் தாங்கிய இராணுவ முயற்சி.

இந்த முயற்சியில் தற்காப்புக்காவோ அல்லது எதிரிகளை தாக்கி போர் புரியவோ அதற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் முஸ்லிம்களுக்கு ஏற்படக் கூடும். எதிரிகள் முஸ்லிம் தேசத்துக்குள் நுழைந்து, முஸ்லிம்களின் உயிர்களுக்கு, சொத்துக்களுக்கு, கண்ணியத்துக்கு பாதகம் ஏற்படுத்தக் கூடும் என்ற ஆபத்தான நிலையில் “தற்பாதுகாப்பு ஜிஹாதுக்காக” ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம் ஏற்படும். இந்த சந்தர்ப்பத்தில் தமது தேசத்துக்குள் பரேவேசிக்கும் எதிரிகளுக்கு எதிராக முஸ்லிம்கள் தற்காப்பு ஜிஹாதில் ஈடுபடுவார்கள். அடுத்து அந்தகாரத்தில் பரிதவிக்கும் அறிவில்லா அப்பாவி மக்களுக்கு இஸ்லாமிய அழைப்பு போய் சேராது தடுப்பதற்கும் இஸ்லாமிய சட்டங்களை அமுல்படுத்தும் முயற்சிக்கு எதிராகவும் போராடும் துஷ்டர்களுக்கு எதிராக முயற்சி செய்வது “தாக்குதல் ஜிஹாத்” எனப்படும். சிலைகளையும், சிற்பங்களையும் வணங்கும் மக்களை, ஏக இறைவனை மாத்திரம் வணங்குவதற்கு வழி காட்டவும், மதம் அல்லது கலாச்சாரம் என்ற பெயரில் மனிதனை அடிமைபடுத்தி செய்யப்படும் கொடுமைகளிலிருந்து அவர்களை காப்பாற்றி மனித இனத்துக்கு சமத்துவம் வழங்கி, நீதியை நிலை நாட்டி கருணை புரிய இஸ்லாம் வந்தது. மக்களுக்கு இஸ்லாத்தைப் பற்றி அறிவு கொடுக்கப் பட்ட பின், அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற எந்த நிர்ப்பந்தமும் இல்லை. நாம் விரும்பியவாறு தகுந்த முடிவெடுக்கும் பொறுப்பு மக்களாகிய எமக்கு உரியது.

முற்றுப்பெறும்